**கவனிக்க.-** *2023.06.09 ஆந் திகதிய 2336 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2337 - 2023 ජූනි මස 16 වැනි සිකුරාදා - 2023.06.16**
*2337 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 614 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2023, யூலை மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, யூன் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**இபலோகம பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் இபலோகம பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைவாக 2022, திசெம்பர் மாதம் 15 ஆம் திகதி இடம்பெற்ற மாதாந்த பொதுக் கூட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் பிரேரணை நிறைவேற்றப்பட்டது என்பதனையும் அச் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைவாக அநுராதபுரம் உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் அப் பிரேரணை அங்கீகரிக்கப்பட்டது என்பதை இத்தால் அறிவிக்கிறேன்.*

*டப். எம். டப். குமாரி விஜேசிங்க*
*செயலாளர்,*
*அதிகாரங்களை செயற்படுத்தும் பணியினை*
*செயற்பாடுகளை நிறைவேற்றும்*
*உத்தியோகத்தர்,*
*இபலோகம பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*இபலோகம.*
*2023, மே 22.*

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் இபலோகம் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைவாக இபலோகம பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமையப்பெற்ற கீழே அட்டவணையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் மற்றும் அதனுடன் விவரிக்கப்படும் எல்லைக்குள் அமையப்பெற்றுள்ள பகுதிகள் அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதிகள் என பிரகடனம் செய்ய முன்மொழிகின்றேன்.*

**அட்டவணை**

*தலாவை, கெக்கிராவை, பிரதான வீதியில் மகா இழுப்பல்லம நகர எல்லை தொடக்கம் கொட்டல்பத்த சபை அதிகார எல்லை வரை அமையப்பெற்றுள்ள பிரதான வீதியின் முடிவு தொடக்கம் 50 அடி தூரம் வலது மற்றும் இடது பக்கம் காணப்படும் முதலாம் தர வீடும்*

*ரணஜயபுர வீதித் தடை தொடக்கம், ரணஜயபுர வீட்டுத் தொகுதியின் இடது பக்கம் காணப்படும்* (SMA/KDE/IEL/ANP/DCE) *வலயத்தில் காணப்படும் 01 ஆம் ஒழுங்கை தொடக்கம் 29 ஆம் ஒழுங்கை வரை காணப்படும் அனைத்து வீடுகளும்*

*கலாவெவ, சுங்கம்வெளி, தெளியாவ, அமுனவெட்டி, குசலானகம, விஜிதபுர நகர எல்லையில் காணப்படும் வீதி இருமருங்கிலும் 100 அடி எல்லையில் வீடுகள் அமையப் பெற்ற பகுதிகள் அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதிகளாக பிரகடனப்படுத்தப்படல் வேண்டும் என தீர்மானிக்கின்றேன்.*

*06-245*

---

**வலிகாமம் தெற்கு பிரதேச சபை - சுன்னாகம்**

*நிர்வாக கட்டளை இல. 27, 20.05.2023*

*2235/54 ஆம் இலக்க 08.07.2021 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஒழுங்கு விதிகளின் அடிப்படையில் கட்டணங்கள் யாவும் 01.06.2023 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை தீர்மானிக்கின்றேன்.*

*(திருமதி) சாரதா உருத்திரசம்பவன்,*
*செயலாளர்.*

*06-252*

திருத்தம்

**தம்பலகமம் பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவு*

*2023.04.28 ஆந் திகதிய 2330 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையின் அச்சுப் பிரதிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ள 04-302 ஆம் இலக்க அறிவித்தலில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொடர் இலக்கங்களுக்குரிய பகுதிகள் பின்வருமாறு திருத்தப்படல் வேண்டும். :*

**தம்பலகமம் பிரதேச சபை, முள்ளிப்பொத்தானை வீதியின் விபரங்கள்**

கிராம அலுவலர் பிரிவு : பொற்கேணி 228/1

| தொ. இல. | வீதியின் பெயர் | ஆரம்பிக்கும் இடம் | முடிவுறும் இடம் | வீதியின் நீளம் (மீற்றர்) | வீதியின் அகலம் (மீற்றர்) | GPS அளவீடு ஆரம்பிக்கும் இடம் Start_X_Co.. | Start_Y_Co.. | முடிவுறும் இடம் End_X_Co.. | End_Y_Co.. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | செங்கதிர் வீதி | விவேகானந்தர் வீதி | பொற்கேணி பிரதான வீதி | 278 | 12 | 81.096962 | 8.491887 | 81.098309 | 8.493955 |
| 28 | விபுலானந்தர் வீதி | நாவலர் வீதி | கலைமகள் வீதி | 478 | 12 | 81.097114 | 8.496183 | 81.100461 | 8.493523 |
| 35 | சபாரட்ணம் வீதி | கலைமகள் வீதி | செந்தூரன் வீடு | 139 | 12 | 81.103160 | 8.490502 | 81.102148 | 8.490278 |
| 36 | நிர்மலன் வீதி | கலைமகள் வீதி | சுதாகரா வீடு | 176 | 12 | 81.103261 | 8.491090 | 81.101685 | 8.491096 |
| 37 | குளக்கோட்டன் வித்தியாலய வீதி | பொற்கேணி பிரதான வீதி | நாதபிரான் கோவில் | 265 | 12 | 81.104223 | 8.491513 | 81.103821 | 8.489476 |

**தம்பலகமம் பிரதேச சபை**
**வீதி வரைபடம்**
**கிராம உததியோகத்தர் பிரிவு - பொற்கேணி 228/I**




வீ. யூ. ஏ. எஸ். உடகெதர,
செயலாளர்,
தம்பலகமம் பிரதேச சபை.

தம்பலகமம் பிரதேச சபை,
பிரதான அலுவலகம்,
முள்ளிப்பொத்தானை.
2023, யூன் 09.

06 - 366